# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/33 - 2020 ජූලි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.07.16

*2184/33 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக் கட்டளைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், தெதுருஓய நீர் வழங்கல் திட்டத்தின் பொல்பிதிகம நீர்க் கோபுரத் தாங்கியை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,*
*இலக்கம் 35,*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, யூலை 08.*
*5/2/3/1532.*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், பொல்பிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 354, பொல்பிதிகம கிராம அலுவலர் பிரிவில் கலபிடகம கிராமத்தில் அமைந்த, அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. ஜே. எம். என். பண்டார அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 383/2017 ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 1 எனும் குறிப்பிடப்பட்டுள்ள முழு அளவில் சுமார் 40 பேர்ச் அளவிலான "பன்சல் வத்த" எனும் காணியில் கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

காணியின் இலக்கம் : 01
காணியின் பெயர் : பன்சல் வத்த
அளவு : 40 பேர்ச்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : பொல்பிதிகமவிலிருந்து நாகொல்ல விஹாரை வரையிலான ஓடும் பிரதேச சபைப் பாதை மற்றும் வனப் பிரதேசம் ;
கிழக்கு : வீடுகளிலிருந்து விஹாரை வரைக்குமான ஓடும் பாதை ;
தெற்கு : சாந்த உரிமை கோரும் காணி ;
மேற்கு : மஹிந்த, கிரிசாந்த மற்றும் சோமசுந்தர உரிமை கோரும் காணிகள்.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் : (1) மதிப்பிற்குரிய கனேகொட ஸ்ரீ சித்தார்த்த தம்மபால ரதனஜோதி தேரர்,
விஹாராதிபதி,
நாகொல்ல புராதன ரஜ மகா விஹாரை,
பொல்பிதிகம.

(2) கௌரவ பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்,
பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்,
புல்லர்ஸ் வீதி,
கொழும்பு 07.

07-812

---

## 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், பிங்கிரிய உடுபத்தாவ நீர் வழங்கல் திட்டத்தின் (கட்டம் 1), உடுபத்தாவ பொறுப்பதிகாரி அலுவலகத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான காணித்துண்டு ஒன்றைப் பெற்றுக்கொள்ளத் தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,
இலக்கம் 35,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2020, யூலை 08.
5/3/KG/01.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், உடுபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 1504, இஹலகம தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உடுபத்தாவ - இஹலகம கிராமத்தில் அமைந்த, அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. எனஸ்லி வீ. லியனகே அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 5306 ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் "A" எனக் குறிப்பிடப்பட்டுள்ள முழு அளவில் சுமார் 30 பேர்ச் அளவிலான "கோன்கஹமுலஹேன வத்த" எனும் காணியில் கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

*காணியின் இலக்கம் :* A
*காணியின் பெயர் :* கோன்கஹமுலஹேன வத்த
*அளவு : 30 பேர்ச்*

**காணியின் எல்லைகள் :**

*வடக்கு : அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. எஸ். எம். திசாநாயக்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 1543 ஐக் கொண்ட வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 02 ;*
*கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி காணித்துண்டு இலக்கம் "B" ;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கம் "B" இற்கான உட்பிரவேசிக்கும் பாதை மற்றும் வரைபட இலக்கம் 1543 இன் காணித்துண்டு இலக்கம் 4 ;*
*மேற்கு : உடுபத்தாவ - நாத்தண்டிய பிரதான வீதி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : (1) திருமதி ஆர். பீ. இந்திரா பத்மலதா,
நாத்தண்டிய வீதி,
உடுபத்தாவ.*

*07-813*